**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைநிலை மனு எண். 237/2017-ல்**

**அசல் வழக்கு எண். 115/2016**

பி. அன்பு .... மனுதாரர்/ பிரதிவாதி

// **எதிர்**//

எஸ். துளசிநாதன் .... எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.V.ராஜகோபால், M.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ரவிச்சந்திரன், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவில் கொடுத்துள்ள அசல் ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அங்கீகரித்துக்கொள்ளும்படி அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 1 A(3) CPC-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம்** :-

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர் அசல் வழக்கில் அசல் ஆவணங்கள் கிடைக்காத காரணத்தால் எதிர்வழக்குரையுடன் ஆவணங்களின் ஜெராக்ஸ் நகல் தாக்கல் செய்துள்ளார். மேற்படி

எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் ஜெராக்ஸ் நகலில் அசல் கிடைத்துள்ளது. மேற்படி பிரதிவாதியின் தந்தை மற்றும் தாயார் இருவரும் இறந்துவிட்ட காரணத்தால் அசல் ஆவணங்களை தேடி பெறுவதற்கும், என்னென்ன ஆவணங்கள் இருக்கின்றன என்பதை தெரிந்து கொள்ள காலதாமதம் ஆகிவிட்டது. விடுபட்ட ஆவணங்களை தேடி பெறுவதில் ஏற்பட்ட காலதாமதத்தால்தான் எதிர்வழக்குரையுடன் அசல் ஆவணங்களை செலுத்த முடியாமல்போய்விட்டது. வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ, காலத்தில் தாக்கல் செய்யக்கூடாது என்று நினைத்து இருக்கவில்லை. ஆகவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள அசல் ஆவணங்கள் மற்றும் கூடுதல் ஆவணங்களும் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொள்ள உத்தரவிட வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் இருக்கிறது. இல்லாவிடில் மனுதாரருக்கு பெருத்த கஷ்டம், நஷ்டம் ஏற்பட்டுவிடும்.

ஆகவே மேற்படி அசல் ஆவணங்கள் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அங்கீகரித்து அசல் வழக்கில் ஒருபாகமாக பாவித்துக்கொள்ளுமாறு உத்தரவிடக்கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3) **எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்** :-

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் கண்டுள்ள விவரங்கள் சட்டப்படியும், நியாயப்படியும், உண்மை நிலவரங்கள் படியும் நிலைநிற்கதக்கதல்ல. அவைகளை எதிர்மனுதாரர்/வாதி மறுதளிக்கிறார். அவைகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்.

மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 26.09.1995 ம் தேதியிட்ட

ஆவணமானது வழக்கிற்காக போலியாக மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணமாகும். மேற்படி ஆவணத்தில் பத்திரம் வாங்கியவர் பெயரும் மற்றும் உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டவர் பெயரும் மற்றும் அதில் சொல்லப்பட்டுள்ள விவரங்களும் அடித்தல், திருத்தம் செய்யப்பட்டு பழைய பேப்பரில் Material Alteration செய்யப்பட்டு வழக்கிற்காக மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணமாகும். மேற்படி ஆவணத்தில் வாதியோ, பிரதிவாதியோ தரப்பினர்கள் கிடையாது. மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணமும் கிடையாது.

மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குடும்ப அட்டை, மின் கட்டண அட்டை, வீட்டுவரி ரசீது ஆகியவை தாவா நிலத்தில் உள்ள சொத்திற்கு ஏற்பட்டவை கிடையாது. மேற்படி ஆவணம் வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணமாகும். மேற்படி மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எரிவாயு இணைப்பிற்கான ரசீது மற்றும் அட்டை ஆகியவைகள் தாவா சொத்திற்குரிய ஆவணங்கள் கிடையாது. மேற்படி ஆவணங்கள் வழக்கிற்காக மோசடியாக தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களாகும்.

மேற்படி மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 6 முதல் 9 வரையிலான ஆவணங்கள் தாவா சொத்திற்குரிய ஆவணங்கள் கிடையாது. மேற்படி ஆவணங்கள் வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணங்களாகும். எனவே மனுதாரர்/பிரதிவாதியால் வழக்கிற்காக மோசடியாக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டள்ள ஆவணங்கள் வழக்கிற்கு முற்றிலும் சம்பந்தமில்லாத ஆவணங்கள் என்பதால் மனுதாரர் தரப்பில் ஆவணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரையை தாக்கல் செய்துள்ளார்.

**4) இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

**5) <u>தீர்வு</u>:-**

**1.** மனு, நிரூபண வாக்குமூலம், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** இம்மனுவினை பரிசீலணை செய்கையில், அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்து, எழுவினாக்கள் வனையப்பட்டு, வாதி தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிய வருகிறது.

**4.** மேற்படி மனுதாரர் அசல் வழக்கில் எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவங்களின் ஜெராக்ஸ் நகலில் அசல் கிடைத்துள்ளது என்றும், பிரதிவாதியின் தந்தை மற்றும் தாயார் அண்மையில் இறந்துவிட்ட காரணத்தினால் மேற்படி அசல் ஆவணங்கள் எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது. மனுதாரர் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ இருக்கவில்லை. அசல் வழக்கை தீர்மானிப்பதற்கு முக்கியமான ஆவணம் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரருக்கு இயற்கை நீதியின் பொருட்டு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதாலும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்ட போதிலும், இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/வாதிக்கு எந்தவித கஷ்டமும் ஏற்படாது.

**5.** மேலும், எதிர்மனுதாருக்கு மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்போகும் ஆவணத்தினைப் பொறுத்து பிரதிவாதி தரப்பில் மேற்படி ஆவணத்தின் தன்மை குறித்து குறுக்கு விசாரணை செய்வதற்கும், ஆவணத்தினை பொறுத்து ஆட்சேபணை செய்வதற்கும் வாய்ப்பு உள்ளது என்பதாலும், மேலும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும், மேலும் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலம், வழக்கின் நிலை ஆகியவற்றினை கருத்திற்கொண்டும் இம்மனுவினை அனுமதிக்கலாம் என்றும் தீர்மானிக்கிறது.

6) **முடிவில்,** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NATARAJAN AZHAGESAN
Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.08.29 18:02:50 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

**இருதரப்பிலும்** : இல்லை

NATARAJAN AZHAGESAN
Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.08.29 18:03:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைநிலை மனு எண். 237/2017-ல்**

**அசல் வழக்கு எண். 115/2016**

திரு. பி. அன்பு, த/பெ. லேட். பாலசுந்தரம், வசிப்பிடம் அந்தோணியார் தெரு, எண்.4 இரும்புளியூர், தாம்பரம் தாலுக்கா. சென்னை சிட்டி சிவில் கோர்ட் இலாகா.

.... மனுதாரர்/ பிரதிவாதி

**// எதிர்//**

திரு. எஸ். துளசிநாதன், த/பெ. லேட். சோமசுந்தரம், வசிப்பிடம் தெற்கு தெரு, தலையாமங்கலம் கிராமம், மன்னார்குடி டி.மு. இலாகா.

.... எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனுவில் கொடுத்துள்ள அசல் ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அங்கீகரித்துக்கொள்ளும்படி அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 1 A(3) CPC-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 23.06.2017

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 01.07.2017

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.V.ராஜகோபால், M.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ரவிச்சந்திரன், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. செலவுத்தொகை இல்லை.

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.08.29 18:03:09 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.